DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.No.118/2025
Prosecution Witness P.W.9

| | |
|---|---|
| Name : **திரு.கிருத்திக்குமார்** | Caste: |
| Father’s Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

3-ம் எதிரி ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**நாள்: 23.02.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் கம்பம், உலகத்தேவர் தெரு, ஐந்தாவது சந்து, 3 வது வார்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 17.11.2024 ம் தேதியன்று காலை 6:00 மணிக்கு பைபாஸ் சாலையில் நம்பியார் ஒர்க்ஷாப் முன்பு நான் நின்று கொண்டிருந்தேன். என்னுடன் பரமன் என்ற நபரும் நின்று கொண்டிருந்தார். அப்போது உத்தமபாளையம் காவல் நிலையத்திலிருந்து போலீசார் வந்தார்கள். எங்கள் இருவரையும் போலீசார் அழைத்தார்கள். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். போலீசார் எங்களிடம் கையெழுத்து கேட்டதன் பேரில் கையெழுத்து போட்டு கொடுத்தோம். ரத்தம் பட்ட மண் மற்றும் ரத்தம் படாத மண் மற்றும் அங்கு கீழே கிடந்த ஒரு போன் ஆகியவற்றை போலீசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் கையெழுத்து போட்டுக் கொடுத்தோம். எங்கள் முன்னிலையில் தயார் செய்த பார்வை மகஜர் அ.சா.ஆ.7, கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8, மற்றும் ரத்தம் பட்ட மண். சா.பொ.6, ரத்தம் படாத மண். சா.பொ.7. எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட செல்போன் சா.பொ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

1. சென்டருக்கு முன்புறம் அமைந்துள்ள சாலையானது கம்பம் – குமுளி பைபாஸ் சாலை. அந்த சாலையின் அகலம் என்றால் தார் சாலையின் அகலம் 40 அடி இருக்கும், அது அல்லாமல் மொத்த சாலையின் அகலம் என்றால் சுமார் 80 அடி அகலம் இருக்கும். ரோட்டிலிருந்து செட்டிக்கு வர வேண்டுமென்றால் ஒரே மட்டத்தில் 5 அடி இறக்கம் அதன் பிறகு ஒரே மட்டத்தில் இருக்கும்.

டீக்கடை ரோட்டுக்கு மேல் அமைந்துள்ளது அதற்கு பக்கத்தில் செட் அமைந்துள்ளது. நான் சம்பவயிடத்திற்கு செல்வதற்குள் பிரேதம் அங்கிருந்து எடுத்துச் சென்று விட்டார்கள். சம்பவம் நடந்த இடத்தில் டேபிள் மற்றும் சேர் தள்ளி தள்ளி கிடந்தது பைக் எதுவும் நான் பார்க்கவில்லை.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் திவாகர் பரமன் ஆகியோர் நண்பர்கள் என்றால் எல்லாம் சரிதான் எதிரிகளும் என் நண்பர்கள் தான். டிரைவர் என்பதால் எல்லா டிரைவர்களும் எனக்கு நண்பர்கள் தான், எதிரியும் எனக்கு நண்பர் தான். இந்த வழக்கில் சாட்சியளிக்க வந்துள்ள அனைவரும் எனது நண்பர்கள் என்றால் டிரைவர் மற்றும் உடன் பணிபுரிபவர்கள், எல்லோரும் கோம்பை ரோடு மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியைச் சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எல்லோரும் டிரைவர்கள் என்பதால் எனக்கு எல்லோரும் நன்கு பழக்கம் என்றால் சரிதான். போலீசார் கைப்பற்றிய செல்போன் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் Red mi 10 pro Max. அந்த போன் ஆன்–ல் தான் இருந்தது அதில் Display–வில் அவரது புகைப்படம் இருந்ததை பார்த்தேன்.

2. இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் நான் சொன்னேனா என்றால் தற்போது தான் இது குறித்து கேட்கிறீர்கள் என்பதால் நான் குறிப்பிடுகிறேன். போலீசார் என்ன வரைந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் நானும் போலீசார் வரையும் பொழுது உடன் தான் இருந்தேன் அவர்கள் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைந்தார்கள். என் முன்னிலையில் தான் போலீசார் வரைந்தார்கள், அதில் நான் கையெழுத்து போட்டேன். ஒரு பக்கம் எழுதியிருந்தார்கள். அதில் என்ன விபரங்கள் எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் நடந்த விபரங்களை எழுதி உள்ளார்கள்.

3. குற்ற எண் எதுவும் போலீசார் என்னிடம் சொல்லவில்லை. மற்றொரு கையெழுத்து போட்ட நபரும் எனக்கு நண்பர் என்றால் சரிதான். அவர் கிருஷ்ணா பைனான்ஸ் நகை அடகு கடை வைத்துள்ளார் என்றால் அது கோம்பை ரோடு சாலையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் எந்த பொருளும் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல ஆய்வாளர் தான் அவ்வாறு தயார் செய்யும்போது உடன் இருந்தார். ஏட்டையா மற்றும் ரைட்டர் அதை எழுதினார்கள். தயார் செய்தது யார் என்று எனக்கு பெயர் தெரியாது. நான் அங்கு செல்லும்பொழுது சுமார் 10– 20 பேர் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான்

**<u>4–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** .

4. நான் கையெழுத்து போட்ட சமயத்தில் காலை 6:15 மணி என்பதால் அப்போது வெளிச்சமாகத்தான் இருந்தது. வரைபடம் தயார் செய்யும்போது லைட் வெளிச்சத்தில் தயார் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் உயரமான ஹைமாஸ் லைட் எதுவும் இல்லை. இரவு நேரங்களில் அந்த இடம் இருட்டான பகுதி என்றால் சரியல்ல. கொட்டகைக்குள் விளக்கு எரிந்து கொண்டிருக்கும். பைபாஸில் அங்கு பொது விளக்குகள் எதுவும் கிடையாது என்றால் சரிதான். நான் கூறுவது போல் வெளிச்ச நேரத்தில் கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை - இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.23 19:26:26 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.